பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ தை மீ 29 உ. திங்கட்கிழமை (11-02-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 76

# வவுனியாவில் மோதல்!

# விமானக்குண்டு வீச்சு!!

## திருமலையில் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 11

திருகோணமலை மாவட்டம் புடவைக்கட்டு முகாமில் இருந்து நேற்றுக்காலை குச்சவெளி நோக்கிப் புறப்பட்ட இராணுவத்தினர் மீது தட்டக்கல் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் இளமோர் தாக்குதலை நடத்தினர்.

படையினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தெரியவரவில்லை. (ஓ)

## பயணிகள் இடையில் திரும்பினர்

யாழ்ப்பாணம், பெப். 11

வவுனியாப் பகுதியில் நேற்று கடும் ஹெலி, பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ஆங்காங்கே துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாக அங்கிருந்து வந்த பயணிகள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் மோதல்கள் இடம்பெறுவதாக வெளியான செய்திகளை அடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறப்பட்ட பயணிகள் இடைவழியில் — கேரதீவுடன் — திரும்பினர்.

நேற்றுக் காலை 7 மணி முதல் வவுனியா நகரை அண்டிய பகுதிகளில் - தாண்டிக்குளம், நொச்சிமோட்டை ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தில் ஹெலி, பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

தாக்குதல்கள் ஆரம்பமானதையடுத்து, கொழும்பு செல்வதற்காக நொச்சிமோட்டையில் தங்கியிருந்த பயணிகள் விழுந்தடித்துக்கொண்டு ஓமந்தைப் பகுதியை நோக்கி ஓடிவந்தனர்.

பயணிகள் ஓடிவரும்போது இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் ஒன்றில் சிறுவன் ஒருவன் பலியானான். மற்றொருவர் காயமடைந்தார்.

நெல்லியடியைச் சேர்ந்த ஜெயக்கொடி பிரதீபன் (வயது 12) என்ற சிறுவனே உயிரிழந்தவனாவான். அவனது சித்தப்பாவான கந்தசாமி சிவஞானம் (வயது 36-

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பொம்மர் குண்டுவீச்சு

## கல்வியங்காடு பகுதியில் வயோதிப மாது பலி!

### சித்த வைத்தியசாலை சேதம்

திருநெல்வேலி கிழக்கு - கல்வியங்காடு - பழம் சந்திக்கு அருகில் நேற்று முற்பகல் 11.40 மணியளவில் இரு பொம்மர்கள் நடத்திய குண்டு வீச்சில் வயோதிப மாது ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

சித்த மருத்துவ வைத்தியசாலை, ஒரு வீடு, ஒரு கார் ஆகியன பலத்த சேதமடைந்தன.

இரு பொம்மர்களும் தாழப் பறந்து சுற்றியதால், மக்கள் பெரும் பதற்றம் அடைந்தனர்.

பல தடவைகள் வட்டமிட்ட பொம்மர்கள் கல்வியங்காடு - பழம் சந்திக்கு அருகிலுள்ள சித்த மருத்துவ நிலையத்தை இலக்கு வைத்து இரு குண்டுகளை வீசின.

இச்சம்பவத்தின் போதே வயோதிப மாது பலியானார். இவர் திருநெல்வேலி புதிய சிவன் வீதியைச் சேர்ந்த செல்லப்பா பரமேஸ்வரி (60 வயது) என்பவர் ஆவார்.

குண்டு வீச்சு நடந்த வேளை வைத்தியசாலைப் பகுதியில் பலர் நின்றிருந்த போதும் தெய்வாதீனமாக வேறு உயிர் இழப்புக்கள் ஏற்படவில்லை.

(ஓ-5-143-15)

## கொக்குவிலில் நேற்று வீடுகள் பல சேதமாகின

கொக்குவில், பெப். 11

கொக்குவில் கிழக்கு, நந்தாவில் ஒழுங்கையில் நேற்று நண்பகல் நடத்தப்பட்ட பொம்மர் குண்டு வீச்சில் மூன்று வீடுகள் இடிந்து சேதமடைந்தன. மற்றும் சில வீடுகள் சிறு சேதங்களுக்கு இலக்காகின.

ஒரு வீட்டின் மேல் விழுந்த குண்டினால், அந்த வீடு தரைமட்டமானது. வீட்டில் இருந்தவர்கள் அருகிலுள்ள ஒரு வீட்டுக்கு - வைபவம் ஒன்றிற்காகச் சென்றிருந்ததால், உயிர் தப்பிக் கொண்டனர்.

எனினும் அப்பகுதியில் நின்றிருந்த காங்கேசன்துறையைச் சேர்ந்த செல்லையா வரதராஜா (41 வயது) என்பவர் காயமடைந்தார்.

(ஓ-69-5-15)

## சங்குவேலியில் தாயும், மகளும் காயம்

மானிப்பாய் சங்குவேலிப் பகுதியில் உடுவில் டச் வீதியடியில் - மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று சிறிலங்கா விமானப் படை பொம்மர்கள் இரண்டு நடத்திய குண்டு வீச்சினால் நான்கு வீடுகள் இடிந்து விழுந்தன. இருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 10.15 மணியளவில் இரண்டு பொம்மர்கள் மாறி மாறி இந்தாக்குதலை நடத்தின.

வீட்டில் நின்ற மோகனா முகுந்தன் இந்துராணி (வயது 25) என்னும் ஒரு பிள்ளையின் தாய் தலையில் காயமடைந்தார்.

இவர் காயமடைந்த நிலையில் பதுங்கு குழியினுள் பாதுகாப்புத் தேடியபோது அதிக இரத்தப் பெருக்கால் நினைவிழந்தார். பின்னர் யாழ். ஆஸ்பத்திரிக்கு அவர் எடுத்து வரப்பட்டார்.

இவரது மகளான மோகன முகுந்தன் தாரணி (வயது 9) சம்பவத்தில் காயமடைந்தார்.

இந்தத் தாக்குதலினால் அருகருகே இருந்த நான்கு வீடுகள் இடிந்து சேதமடைந்தன.

(ஓ-5-90-15)

## குண்டுவீச்சுக்கு ஓடியவர் கிணற்றில் விழுந்து பலி!

யாழ்ப்பாணம், பெப். 11

சங்குவேலிப் பகுதியில் பொம்மர் குண்டு வீச்சு நடத்த போது பயத்தினால் ஓடிய ஒருவர், கிணற்றுக்குள் தவறி விழுந்து மரணமானார்.

வயலில் அருவி வெட்டிக் கொண்டிருந்த உடுவில் டச் வீதியைச் சேர்ந்த அமலநாயகம் அன்ரனி டான்ஸ்ரர் (17 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

இவர் மானிப்பாய் [illegible] கல்லூரி மாணவர் [illegible] தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

## தொண்டர் நிறுவன உதவியை நிறுத்த அரசு படாதபாடு!

யாழ்ப்பாணம், பெப். 11

உள்ளதையும் கெடுத்தானாம் கொள்ளிக் கண்ணன் என்று சொல்வார்கள்! அந்த வேலையை இப்போது அரசாங்கம் செய்து வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்குப் போதிய உணவுப் பொருள்களை அனுப்பாமல் இருக்கும் அரசாங்கம்-

வெளி நாட்டு, உள் நாட்டுத் தொண்டர் நிறுவனங்களையும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு நிவாரணப் பொருள்களை அனுப்ப வேண்டாம் என்று - ஆலோசனை கூறியுள்ளது!

கொழும்பில் இயங்கும் ரெட்பானா, ஒக்ஸ்பாம், யு.எஸ். எயிட்ஸ், யூனிசெப், டயக்கோனியா, நொறாட், சிறுவர் பாதுகாப்பு நிதியம், அவுஸ்திரேலியா சமூக உதவி நிறுவனம், போரும் போன்ற அமைப்புகள் ஒன்று சேர்ந்து இணையம் ஒன்றை உருவாக்கியுள்ளன.

இணையத்தின் கூட்டம் கடந்த 31 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது. அந்தக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒலுமடுவில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், பெப். 11

முல்லைத்தீவு மாவட்டம், நெடுங்கேணி, ஒலுமடுவில் நேற்று முன்தினம் ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது.

இச்சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார்.

(ஓ)

## வெளியுறவு மந்திரியாக சுக்லா நீடிப்பாரா?

எம்.பி. பதவிகளை இழந்த மத்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லா உட்பட ஐந்து மத்திய அமைச்சர்கள் தொடர்ந்தும் பதவியில் நீடிப்பார்களா என்பது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும்.

பிரதமர் சந்திரசேகர் முன் கண்டவாறு நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்திற்கு இடைக்கால பொதுத் தேர்தல் நடத்தப்படுவதை தாம் விரும்பவில்லை என்றும் தேர்தல் ஒன்றைச் சந்திக்கும் நிலையில் நாடு இல்லை என்றும் அவர் மேலும் சொன்னார்.

(உ-எ)

## உறவு சுமுகமாம்

புதுடில்லி, பெப். 11

துணைப் பிரதமர் தேவிலாலுக்கும் தமக்கும் இடையிலான உறவு சுமுகமாக இருப்பதாக பிரதமர் சந்திரசேகர் நேற்றுத் தெரிவித்தார்.

(ஓ-எ)

### முச்சந்தி முரளி



சித்த வைத்திய நிலையமிக [illegible] போட்டினம் பேரலை......!

### ★ மட்டக்களப்பில்

## தமிழ்க் கிராமங்கள் பல வெறிச்சோடிய நிலையில்

மட்டக்களப்பு, பெப். 11

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல தமிழ்க் கிராமங்கள் முற்றாக அழிந்துள்ளன. தமிழர் நடமாட்டமே இல்லை. பெரும்பாலானவை வெறிச்சோடிக் கிடக்கின்றன.

கிரான், சித்தாண்டி, பாலமுனை, செங்கலடி ஆகிய தமிழ்க் கிராமங்களில் மிகச் சில வீடுகளே சேதமடையாமல் தப்பி உள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் ரெலோ இயக்கத்தினர் ஆயுதப் படையினருக்கு தகவல் கொடுப்பவர்களாக உள்ளனர் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இம் மாவட்டத்தின் சில பகுதிகளில் இயங்கும் ரெலோ இயக்கத்தினருக்கு ரி-56 துப்பாக்கிகளும் மற்றும் தொலை

(4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எங்களிடம் மோர், தயிர், வடகம் மோர்மிளகாய், அப்பளம், ஊறுகாய் கற்பூரம், ஊதுபத்தி என்பன மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள குடாநாட்டில் ஒரே ஸ்தாபனம் சிவன் கோவிலடி, மோர்க்கடை, 415. K. K. S. றோட் யாழ்ப்பாணம். (வண்ணை சிவன் கோவில் அருகாமை) (15811)

### விற்பனைக்கு

மிக்சுவைத் திரவ சவர்க்காரம் (Liquid Soap) வேம்பெண்ணெய் சைதடிப நேர்கரி சந்தத்திலும் விற்பனைக்கு உண்டு. (C/5748)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள்; "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம்; வியாழன் விடுமுறை; (15799)

### சாயிராம் மிருதங்க வகுப்பு

தரமான ஆசிரியர்களைக் கொண்டு பரீட்சைகளுக்கு ஏற்ற நல்ல முறையில் தொடர்ந்து சனி, ஞாயிறு காலையும், மாலையும் வகுப்புகள் எதுவித தடையுமின்றி ஒழுங்காக நடைபெறுகிறது. விபரங்களுக்கு கோவிந்தப்பிள்ளை விஜயகுமார் மிருதங்க வகுப்பு தொழில் நிலையம். 192, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (15438)

### நாடக நூல்கள்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய கெட்டிக்காரர்கள் 20/-, முதலாம் பிள்ளை 30/- மாணவர்களும் மேடையில் நடிப்பதற்கேற்ற நடிப்புக் குறிப்புகள், விளக்கங்கள், விமர்சனங்களும் கொண்ட 19 வானொலி நாடகங்கள் எங்கும் கிடைக்கும். (15426)

### தரன் ஸ்ருடியோ

தபர் சிக், கலர் - கறுப்பு - வெள்ளை பாஸ்போர்ட், அடையாள அட்டை 12"X10" படங்கள், பிளாஸ்ரிக் விளம்பரபோட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, யாழ். வீதி, (செடனா வீதி) யாழ்ப்பாணம். (15710)

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும்! FUDO: 39,/17, மின்சார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய். (C/5744)

### காணவில்லை

8-2 91 அன்று அல்சேசன் இனநாய் (கபில நிறம், முதுகில் நரை விழுந்த நாய்) யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் காணாமல் போய்விட்டது. இந்நாயை கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தெரிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். இ. தயா, 65/7, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். (15810)

---

# முக்கிய அறிவித்தல்

01 01 - 1991 முதல் எமது ஆர். வி ஜி. பீடிகள் வழமை போல பல வர்ண லேபலில் விற்பனை செய்யப்படுகின்றன.

எமது அசல் ஆர் வி ஜி பீடிகள் வெள்ளை லேபல்களில் விற்பனையாவதில்லை என்பதை ஆர். வி ஜி பீடி விற்பனையாளர்கள், பாவனையாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகிறோம்.

போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

**ஆர். வி. ஜி. நிர்வாகம்**

(15805)

---

யாழ். பல்கலைக்கழக லிகிதர் பதவி போட்டிப் பரீட்சைக்கான

# விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: நுண்ணறிவு (I. Q.)

★ தொடர்ச்சியாக 10 தினங்கள்;
★ நாளாந்தம் 2 மணித்தியாலங்கள்;
★ இலவச பாடக் குறிப்புகள்;
★ 1½ மணித்தியாலங்களுக்கான - கட்டணம் ரூபா 10/- மட்டுமே;

ஆரம்பம்: 16 - 02 - 91 முற்பகல் 9 மணி

● வகுப்புகள் யாவும் எமது கிளை நிறுவனத்தில் நடைபெறும்.

கிளை: Astan English Achamedy, 125, அரசடி வீதி, கந்தர்மடம்.

விபரங்களுக்கு: நேரில் பிற்பகல் 2.00 — 5 30 வரை

# ASTAN INSTITUTE (Branch)

125, Arasady Road, Kantharmadam.

(கந்தர்மடம் சந்திக்கண்மையில்) (C-5740)

---

# விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.)

## O/L 1991 SAT & SUN CLASSES

(8 00 pm — 2-00 pm)

புதிய பிரிவு ஆரம்பம்: 23-02-91

(C/5749)

---

# 6 ஆம் மாத நினைவஞ்சலி



பிறப்பு: 25 — 6 — 1971

இறப்பு: 27 — 08 — 1990

## செல்லப்பா குலேந்திரன்

ஆறாத்துயர் தந்து எமையெல்லாம்
மீளாத்துயர் கொள்ள வைத்தீரே:
உமது ஆத்மா சாந்தி அடைய இறைவனை நிதம் வேண்டும்.

அன்புப் பெற்றோர்கள்,
சகோதரர்கள்,
சகோதரிகள்.

243, காரைநகர் வீதி,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (15800)

---

# 2 ஆம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்: 26 — 10 — 1910

மறைவு: 11 — 02 — 1989

## அமரர் செல்லப்பா ஆறுமுகம்

(சட்டத்தரணியும், நந்தாவில் அம்மன் கோவில் தர்மகர்த்தாவும்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

ஆறுமுகம் குடும்பத்தவர்கள்,

நந்தாவில், கொக்குவில். (15770)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 02 - 01 - 1961

உதிர்வு: 12 - 01 - 1991

## செல்வன் உ. உதயகுமார்

அன்பிலே சிறந்து பழகும் பண்பிலே உயர்ந்து அறிவுடைய நம்பியாகக் குடும்பத்தில் விளங்கி தாய், தந்தை மெச்சிடும் வண்ணம் வாழ்ந்த உதயன் தரணியில் மறைந்து நாட்கள் முப்பது கழிந்ததம்மா

என்றும் உமது நினைவில் வாழும்
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்.

"புதுவளவு"
வதிரி. (15803)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 25 — 10 — 1930

முருகன் அடியில்: 12 — 01 — 1990

## அமரர் சின்னப்பு நவரட்ணம்

(உரிமையாளர்; ஜெய்சங்கர் தச்சுத் தொழிற்சாலை, பொறுப்பாளர்: கந்தர்மடம் சனசமூக நிலையம்)

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, நல்லூர் முருகனுடன் ஐக்கியமாகி விட்ட எம் குல தெய்வமே! நீங்கள் இல்லாமல் எங்கள் குடும்பம் நிலவில்லா வானம் போல் இருண்டு கிடக்கிறது; ஓடி வந்து எம் துயர் தீர்ப்பீர்களா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்,

70, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (15433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உணர்த்துங்கள், உணர்த்துங்கள்!

அரச விமானப் படையினர் கடந்த மூன்று வாரங்களாக, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்கள் மீதே இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்துகின்றனர்.

கடந்த வருடம் ஜூன் மாதம் போர் ஆரம்பமான காலம் தொடக்கம் குண்டு வீச்சு என்பது, பொது மக்களை அழிப்பதற்கும், அவர்களின் உடைமைகளை நாசமாக்குவதற்குமே என்ற நிலைப்பாடே இருந்து வருகிறது.

பொது மக்களும், அவர்களின் உடைமைகளும் தாக்கப்படுவது குறித்து கேள்வி எழுப்பப்படும் போதெல்லாம் விமானப் படையினர் அவ்வாறு செய்யவில்லை என்று அரசினரால் முழுப் பூசணிக்காய் சோற்றில் புதைக்கப்படுவது வழக்கமாகி விட்டது.

எனினும் சமீபத்தில், பொது மக்கள் கூட்டமாக உள்ள இடங்கள் மீதான, தாக்குதல்களை மறைப்பது அரசுக்குச் சற்றுக் கஷ்டமாக மாறி வருகிறது. பல தொண்டர் நிறுவனங்கள் விமானக்குண்டு வீச்சினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டதும், குண்டு வீச்சு நடக்கும் இடங்களுக்கு அவற்றின் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்த்து, தங்கள் தலைமை அலுவலகங்களுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதுமே இதற்குக் காரணமாகும்.

எனினும் அரசு உண்மையைத் திரைபோட்டு மறைக்கும் தனது விதண்டாவாத முயற்சிகளைக் கைவிட்டு விடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

குவைத்தை ஈராக்கிடம் இருந்து விடுவிப்பதற்கு பலாத்காரத்தைப் பிரயோகிக்க வேண்டும் என்று ஐ. நா. சபை இயற்றிய தீர்மானத்தை சோவியத் யூனியன் ஆதரித்தது. ஆனால் இப்போது அமெரிக்காவும், அதன் நேச நாட்டுப் படைகளும் ஈராக்கையும், ஈராக்கிய மக்களையும் அழிப்பதை சகித்துக் கொண்டிருக்க முடியாது என்று கோர்பச்சேவ் குரல் கொடுத்திருக்கிறார்.

இத்தனைக்கும், ஈராக்கில் இதுவரை ஏற்பட்ட பொது மக்கள் உயிரிழப்பு, கடந்த எட்டு மாதங்களில் ஈழத் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்ட தமிழர்களின் உயிரிழப்புடன் ஒப்பிடும்போது மிகவும் குறைவானதாகும்.

ஆனால் சரியான உண்மை நிலை உலகுக்குத் தெரியாததால் எந்த உலக நாடும் ஸ்ரீலங்கா அரசைத் தட்டிக் கேட்க முன்வரவில்லை. மனிதாபிமானத்தின் பொருட்டாவது, பொதுமக்களை அழிப்பதை நிறுத்துமாறு கொழும்பு அரசுக்கு நிர்ப்பந்தம் கொடுக்கத் தவறிவிட்டனர். வெறும் உள்நாட்டுச் சண்டை என்று தப்புக் கணக்குப் போட்டு வாளாவிருக்கின்றனர். உள்நாட்டு யுத்தம் என்பதால், கண்மூடித்தனமாகக் குண்டு வீச்சு நடத்திப் பொதுமக்களைக் கொன்றொழிக்க எந்த அரசுக்கும் உரிமை உண்டா?

இது குறித்து இங்கு இயங்கும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் தத்தமது நாடுகளின் அரசுகளுக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்ல வேண்டும். தமது தலைமைக் காரியங்களை அவ்வாறு செய்யத்தூண்ட வேண்டும். ஓர் இன மக்களை, ஓர் அரசு குண்டு வீசி அழித்தொழிப்பது சர்வதேச மட்டத்திலான தார்மிகத் தவறு என்பதையாவது உணர்த்தச் செய்ய வேண்டும்.

# சொந்த இடங்களில் கடமை புரிய கிராமசேவையாளருக்கு வாய்ப்பு

## இடமாற்றத்திட்டம் அமுலுக்கு வருகிறது

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்-மாவட்டத்தில் கிராம சேவையாளர்கள் அவரவர் கிராமங்களில் கடமையாற்ற வசதியாக இடமாற்றத்திட்டம் ஒன்று நடைமுறைக்கு வரஇருக்கிறது.

மாகாண சபையின் உதவி அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உதவி அரசாங்க அதிபர்கள் மூலம் இதற்கான விண்ணப்பங்களை கோரியுள்ளார்.

இந்த இடமாற்றத்திட்டம் அமுல் செய்யப்பட்ட பின்னர் வெற்றிடமாகவுள்ள 64 கிராம சேவையாளர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. (இ-3)

## பாடசாலை அபிவிருத்தி சபைகள்

கொழும்பு பெப். 11

புதிய முறையில் 'பாடசாலை அபிவிருத்திச் சபைகள்' அமைக்கப்படும் என்று கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

புதிய சபையில் — இரகசிய வாக்கெடுப்புமூலம் தெரிவான மூன்று பழைய மாணவர், பெற்றோரின் சார்பில் மூன்று உறுப்பினர்கள்,

அதிபரின் சார்பில் மூன்று உறுப்பினர்கள்,

கல்வித் திணைக்களத்தின் சார்பில் ஒரு உறுப்பினர் ஆகியவர்கள் இடம் பெறுவர் என்று அமைச்சர் அறிவித்தார்.

## பக்திபூர்வமாக நாளை சிவராத்திரி அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், பெப். 11

மகா சிவராத்திரி தினம் நாளை செவ்வாய்க்கிழமை தமிழ்ப் பகுதிகள் எங்கும் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படும்.

சிவாலயங்களில் நாளை இரவு விசேட நான்கு சாமப் பூஜைகள் நடைபெறும். கூட்டுப்பிரார்த்தனைகள், சமயச் சொற்பொழிவுகள், கதாப் பிரசங்கங்கள், புராண படனங்கள் ஆகிய நிகழ்ச்சிகளுடன் பக்தர்கள் விரதம் அனுஷ்டிப்பர்.

சிவராத்திரி தின நிர்ணயத்தில் சர்ச்சையும், குழப்பமும் ஏற்பட்டுள்ள போதிலும் ஈழத்திலும், தமிழகத்திலும் நாளைக்கே விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

தமிழகத்தில் சிதம்பரம், திருவண்ணாமலை, இராமேஸ்வரம், காஞ்சி, சென்னிமலை உட்பட எல்லாச் சிவாலயங்களிலும் நாளைக்கே சிவராத்திரி அனுஷ்டிக்கப் படுகிறது. 1983 ஆம் ஆண்டிலும் தமிழகக்கோவில்களில் தை மாதத்தில் சிவராத்திரி அனுஷ்டிக்கப்பட்டதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இம்முறை தமிழ்நாட்டில் பல சிவாலயங்களில் தை மாதம் 21 ஆம் திகதி பிரம்மோற்சவ துவஜாரோகணம் நடந்த நாளை சிவராத்திரி அனுஷ்டிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது. (இ)

## வடமராட்சியில் நெருப்புக்காய்ச்சல்

பருத்தித்துறை, பெப். 11

வடமராட்சிப் பகுதியில் கடந்த சில நாட்களாக நெருப்புக்காய்ச்சல் நோய் வேகமாகப் பரவி வருகிறது.

இதனைத் தடுப்பதற்கான உடனடி வைத்திய உதவிகளை வழங்குமாறு பருத்தித்துறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரைவேற்பிள்ளையை அப்பகுதிப் பொதுஸ்தாபனங்கள் கேட்டுள்ளன. இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சுகாதாரப் பிரிவும் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

(இ-118)

## பன்னாட்டுப்படைகள் குறித்து கோர்பச்சேவ் குற்றச்சாட்டு

ஐ. நா. பாதுகாப்புச்சபை வழங்கிய ஆணைக்கும் அப்பால் சென்று பன்னாட்டுப் படைகள் ஈராக்கைத் தாக்கி வருகின்றன என்று சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவ் நேற்றுக் குற்றஞ் சாட்டினார்.

வளைகுடாப்போர் விஸ்தரிக்கப்படும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் அவர் எச்சரித்தார்.

சமாதான முயற்சியில் ஒரு கட்டமாக தமது விசேட பிரதிநிதி ஒருவர் பக்தாத்துக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படுவர் என்றும—

அவர் அங்கு ஜனாதிபதி சதாம் ஹுசைனை நேரில் சந்தித்துப் பேசுவார் என்றும் திரு. கோர்பச்சேவ் கூறினார்.

இதேவேளை — யதார்த்த நிலையை உணர்ந்து விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்துகொள்ள முன்வரும்படி ஈராக் ஜனாதிபதிக்கு திரு. கோர்பச்சேவ் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்திருக்கிறார்.

## ஈராக்கிற்கு வைத்திய உதவி

பக்தாதுக்கு வைத்திய உதவிகளை அடுத்த வாரம் அனுப்பி வைக்கப்போவதாக ஐ. நா. பொதுச்செயலாளர் பெரஸ் டி குயிலர் நேற்று அறிவித்தார்.

## சதாமை கொல்ல வேண்டுமாம்

ஜனாதிபதி சதாம் ஹுசேனைக் கொலை செய்து ஈராக் நாட்டைக் காப்பாற்றும்படி ஈராக்கிய இராணுவத்தினருக்கு சிரியாவில் இருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்று கோரிக்கை விடுத்து உள்ளது.

## எகிப்து ஜனாதிபதி எச்சரிக்கை

குவைத்தில் இருந்து ஈராக்கின் படைகளை விலக்கிக் கொள்ளும் உத்தரவாதத்தை ஜனாதிபதி சதாம் ஹுசைனிடம் இருந்து பெற்றுக் கொள்ளாமல் வளைகுடாப்போரில் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவது ஆபத்தாக முடியும் என்று எகிப்து ஜனாதிபதி ஹுஸ்னி முபாரக் நேற்று எச்சரித்தார்.

## இதுவரை 31 தாக்குதல்கள்

கடந்த வெள்ளிக்கிழமை வரை இஸ்ரேல் மீது ஈராக் 31 ஸ்கட் ஏவுகணைகளை ஏவியுள்ளது என்று அறிவிக்கப்படுகின்றது.

## பாகிஸ்தானுக்கு உரிமை இல்லை

வளைகுடாப்போரில் மத்தியஸ்தம் செய்யும் உரிமை பாகிஸ்தானுக்கு இல்லை என்று ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரிக் அஸீஸ் நேற்று அறிவித்தார்.

உள்நாட்டில் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள ஆத்திரத்தை அடக்கும் ஒரு நடவடிக்கையாகவே பாகிஸ்தான் பிரதமர் ஷெரீப் சமாதானத்தூது அமைத்திருப்பதாகவும் ஈராக் தெரிவித்துள்ளது.

பன்னாட்டுப்படைகளுடன் சேர்ந்து ஈராக்குடன்போரிட பாகிஸ்தானும் படைகளை அனுப்பியுள்ளது தெரிந்ததே.

## 600 பீரங்கிகள் அழிப்பு

ஈராக்கின் 4 ஆயிரம் பீரங்கி வாகனங்களில் அறுநூறை பிரிட்டிஷ் போர் விமானங்கள் தாக்கி அழித்து விட்டன என்று பிரிட்டிஷ் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

## குற்றச்சாட்டுக்கு மறுப்பு

பாட்னா, பெப். 11

பீஹார் மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத்காந்த் சஹாய் தெரிவித்த குற்றச்சாட்டை மாநில முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவ் நேற்று மறுத்தார்.

## ஸ்ரான்லி வீதி கிளையில் ரூ. 2ஆயிரம்

யாழ்ப்பாணம், பெப். 11

இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் பணம் அதிகரிக்கப் படவுள்ளது.

இன்று திங்கள் முதல் வாடிக்கையாளர்களுக்கு ரூபா 2 ஆயிரம் பணமாக வழங்கப்படும் என்றும் அதில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ-5)

## அரச சார்பற்ற நிறுவனங்கள் கிளிநொச்சியிலும் சிறு தானியச் செய்கை

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் விவசாய முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

அந்த மாவட்டங்களில் தனித்தனியே உருவாக்கப் பட்டுள்ள அ. சா. நிறுவனங்களின் ஒன்றியம் மூலம் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

விவசாயம் மேற்கொள்ளப்படாதுள்ள காணிகளைத் தெரிவு செய்து பெரிய அளவில் கௌப்பி, பயறு, உழுந்து போன்றவற்றை பயிரிட முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் சிறு தானியச் செய்கையில் ஈடுபட ஆரம்ப முயற்சிகளை மேற்கொண்டு வருவது தெரிந்ததே. (இ-3)

## ஒத்திவைப்பு

நாளை 12 ஆம் திகதி யாழ். கூட்டுறவு அலுவலகத்தில் நடைபெற இருந்த கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான விசேஷ கருத்தரங்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (இ)

# கல்விச்சேவைபதவிஉயர்வுபரீட்சை ஒழுங்கீனத்தை விசாரிக்கக் குழு

யாழ்ப்பாணம், பெப். 11

கல்வி நிர்வாக சேவையின் III-ஆம் தரத்தில் இருந்து II ஆம் தரத்துக்கு பதவி உயர்வு வழங்கும் பொருட்டு 1988 ஆம் ஆண்டு நடந்த நேர்முகப்பரீட்சையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் குறித்து விசாரிக்கப்பட உள்ளது.

ஒழுங்கீனம் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமளிப்பதற்கான விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தலைவராக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விக்குழு உறுப்பினர் திரு. க. ஜெயக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார். கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு ஸ்ரான்லி விஜேசிங்காவும், கல்வி அமைச்சின் பிரதம ஆணையாளர் திரு பி. குமாரசிறி ஆகியோர் விசாரணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்கள்.

கல்விக் குழுவின் சிரேஷ்ட உதவிக் காரியதரிசி திரு. ஏ. [illegible] செயலாளராகப் பணிபுரிவார்.

பதவி உயர்வில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கருதும் விண்ணப்பதாரிகள் இம்மாதம் 28 ஆம் திகதிவரை தமது எழுத்துமூல முறைப்பாடுகளை விசாரணைக் குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

எழுத்துமூல முறைப்பாடுகள் பரிசீலனை செய்யப் பட்டபின்னர், அவசியம் எனக் கருதப்பட்டால் விண்ணப்பதாரர்கள் நேரில் வாக்குமூலம் கொடுப்பதற்கும் அழைக்கப்படுவர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்தன் கூட்டுத்தாபனம் மக்கள் கம்பெனியானது

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் மக்கள் மயப்படுத்தப்பட்ட நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

அரசாங்க கொள்கைப்படி பரந்தன் இரசாயன கொம்பனி லிமிட்டெட் என்று அந்த கூட்டுத்தாபனம் இபெயர் மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் தலைவராக உபாலி சில்வா பதவி ஏற்றுள்ளார். பதவி வகித்த ஐந்து பணிப்பாளர்களும் இந்த நிறுவனத்தில் தொடர்ந்து கடமை புரிவர்.

முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டம் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

அதே சமயம் பரந்தன், இரசாயனத் தொழிற்சாலைக்கு பதிலாக புதிய தொழிற்சாலை ஒன்றை அம்பாந்தோட்டையில் அமைப்பது பற்றி கைத்தொழில் அமைச்சு ஆராய்ந்து வருவதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை கடந்த ஆறு வருடங்களாகச் செயற்படாது இருந்து வருகின்றது. (இ-எ-3)

# தமிழ்-முஸ்லிம் கட்சிகள் கூட்டாக யோசனை

கொழும்பில், தமிழர் மற்றும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் அமைப்புகளும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் புதிய யோசனை ஒன்றை கூட்டாகத் தயாரித்துள்ளன.

இந்த நகல் யோசனை எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் கையளிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு இறுதி முடிவு எடுக்கும் முகமாக அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டை இம் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸ அழைத்திருக்கிறார் என்பது தெரிந்ததே.

இதே வேளை - இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எதனையும் முன்வைக்கும் பட்சத்தில் அதனை தமது கட்சி எதிர்க்காது என்று சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறியுள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. [அ எ]

# பிரதம தபாலகத்தில் பதிவு தபால்கள் தேக்கம்

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பதிவுத் தபால்களில் ஏராளமானவை பிரதம தபாலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

சம்பந்தப் பட்டவர்கள் இடம்பெயர்ந்து சென்று விட்டதாலேயே பிரஸ்தாப தபால்களை ஒப்படைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுக் காசோலைகள், டிராப்டுகள் போன்றவையே பெரும்பாலும் பதிவுத் தபால்களில் வந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

உரியவர்கள் தபாலகத்துக்கு வந்து பெற்றுக்கொள்ளாத விடத்து, அவற்றைக் கொழும்புக்குத் திருப்பி அனுப்ப நேரிடும் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-3]

# பொம்மர் குண்டுச் சிதறல் அரை மைல் பறந்தது

## பசு மாட்டிற்கு கழுத்தில் காயம்

கொக்குவில், நந்தாவில் பகுதியில் குண்டு வீச்சு நடந்த இடத்தில் இருந்து சுமார் அரை மைல் தூரத்துக்கு குண்டின் சிதறல்கள் தெறித்துப் பறந்தன.

சுமார் அரை மைலுக்கு அப்பால் கட்டப்பட்டு மேய்ந்து கொண்டிருந்த பசு மாடு குண்டுச் சிதறல் பட்டதால் கழுத்தில் ஆழமான காயத்துக்கு இலக்கானது. [ஓ-69]

# மேசன், தச்சுவேலை பெண்களுக்கும் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப், 11

மேசன், தச்சு வேலை பயிற்சி நெறிக்கு முதல் தடவையாக பெண்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் கெயர் அமைப்பின் உதவியுடன் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறி எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இந்தப்பயிற்சி நெறியில் பயிற்சி பெறவிருக்கும் 30 பேரில் 24 பேர் பெண்கள்.

உடுவில் பூரணி இல்லத்தின் சிபார்சின் பேரில் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (உ-3)

# லித்துவேனிய மக்கள் தனிநாட்டுக்கு ஆதரவு

மாஸ்கோ, பெப். 11

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்று தனி நாடாக வேண்டும் என்று லித்துவேனியா மக்கள் வாக்களித்தனர்.

இது தொடர்பாக லித்துவேனியாவில் மாநில அரசு நடத்திய கருத்துக் கணிப்பில் 90.4 சதவீதமானோர் தனி நாட்டுக் கோரிக்கையை ஆதரித்து வாக்களித்தனர்.

கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட இக்கருத்துக் கணிப்பு சட்டவிரோதமானது என்று சோவியத் ஜனாதிபதி மிக்கேல் கோர்பச்சேவ் ஏற்கனவே அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. [ஓ எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 803/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 11 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மீளவும் நியமனம்

யாழ் மாவட்டத்தில் அநேக பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல சேவையாளர்கள் சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்றனர்.

எனினும் இவர்களில் அநேகர் ஒப்பந்த அடிப்படையில் மீள நியமனம் பெற விண்ணப்பித்துள்ளதால் சுகாதார சேவையாளர் பற்றாக்குறை ஓரளவு நீங்கும் என சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-18)

# பலர் பலி

மொகடிஷு, பெப் 11

சோமாலியாவில் இரு தீவிரவாதக் குழுக்களுக்கு இடையே நடந்து வரும் மோதல்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கொல்லப்பட்டு வருகின்றனர்.

# வவுனியா...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி விஞ்ஞான கூட உதவியாளர்] என்பவர் காயமுற்றார்.

காயமுற்ற சிவஞானமும் உயிரிழந்த சிறுவனின் தாயாரும், அந்தச் சிறுவனின் சடலத்தை தூக்கிக் கொண்டு சுமார் ஒரு மைல் தூரம் வரை ஓடிவந்ததாகவும்—

ஆனால் இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் முன்னேற முடியாத நிலையில் சிறுவனின் சடலத்தை வீதியோரத்தில் கிடத்தி விட்டு அவர்கள் வந்து சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள் குறித்து ஊர்ஜிதப்படுத்தப்பட்ட, தெளிவான தகவல்கள் கிடைக்காத போதும்—

அப்பகுதியில் மோதல் இடம்பெறுவதாகவும், பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

# தொண்டர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் புனர் வாழ்வு அமைச்சினதும், பாதுகாப்பு அமைச்சினதும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அரசாங்கம் வடக்கு-கிழக்கில் போதியளவு நிவாரணங்களை வழங்குவதால், தொண்டர் ஸ்தாபனங்கள் அங்கு நிவாரணப் பணிகளை அதிகமாகச் செய்ய வேண்டியதில்லை என்று அரச அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவித்தனர்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதி அரச அதிகாரிகள் கூறியது உண்மைக்குப் புறம்பானது என்று எடுத்துரைத்தார்.

அரசு அனுப்பும் உணவு மற்றும் மருந்து வகைகள் போதா என்றும் மக்கள் பட்டினி வாழ்வு நடத்துவதாகவும், நோய்களுக்குச் சிகிச்சை பெற முடியாமலும் இறக்க நேரிடுகிறது என்றும் அவர் விளக்கினார்.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு போதிய உணவு மற்றும் மருந்து வகைகளை கப்பல் மூலம் அனுப்புவது என்று கொழும்பு தொண்டர் நிறுவன ஒன்றியம் இறுதியில் முடிவு செய்தது. [அ-3]

# தமிழ்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசி வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மேலதிக படையினர் அனுப்பப்பட்டிருப்பதாகவும், இது கிழக்கில் மீண்டும் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கான முன்னோடி என்றும் தெரிவிக்கப்படுகிறது. [...]

# சரித்திர தோல்வி ஏற்படுமாம்!

தரையுத்தத்தில் பன்னாட்டுப் படையினரைத் தோற்கடிப்போம் என்று ஈராக் அறிவித்து உள்ளது. பன்னாட்டுப் படையினர் அடையப்போகும் தோல்வி பற்றி உலகம் பல நூற்றாண்டுகள் பேசும்; அது உலக சரித்திரத்திலும் அழியா இடம்பெறும் என்று ஈராக் பாதுகாப்பு அமைச்சு வெளியிடும் அல் - காடிஸியா பத்திரிகையில் கூறப்பட்டது.

# இப்படியும் சிப்பாய்கள்!

பாலைவனப் போரில் ஈடுபடும் பன்னாட்டுப் படையினர் பலர் தமது மனைவி, குழந்தைகளின் படங்களையும் போர் முனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

சிலர் தங்கள் குழந்தைகளின் தலைமயிர்க் கற்றைகளை வெட்டி பாதுகாப்பாகக் கொண்டு திரிகின்றனர்.

இன்னும் சிலர் காதலிகள் அனுப்பிய பரிசுகளை ஹெல்மட்டுக்குள் வைத்து அணிகின்றனர். வேறு சிலர் பைபிள் பிரதிகளை வைத்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஏவுகணை விவரங்கள்

ஈராக்கிடம் 600 கிலோ மீற்றர் தூரம் செல்லக்கூடிய 'அல்ஹுசைன்' ஏவுகணை, 900 கிலோ மீற்றர் சென்று தாக்கக்கூடிய 'அல்-அப்பாஸ்' ஏவுகணை ஆகியன இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தற்போது ஈராக் பயன்படுத்தும் ஸ்கட் ஏவுகணை 280 கிலோ மீற்றர் தூரம் சென்றே தாக்கக்கூடியது.

ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கக்கூடிய 'பதர்' ஏவுகணையைத் தயாரிக்கும் திட்டத்தை ஈராக் நிறுத்தி வைத்துள்ளது.

இதேசமயம் இஸ்ரவேலிடம் 480 கிலோ மீற்றர் செல்லும் ஜெரிக்கோ - 1 ஏவுகணை, 759 கிலோ மீற்றர் செல்லும் ஜெரிக்கோ - 2 ஆகியன உள்ளன. ஆயிரத்து 440 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கக்கூடிய ஜெரிக்கோ - 2பி ஏவுகணையை இஸ்ரவேல் தற்போது தயாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஈரான் யோசனை நிராகரிப்பு

ஈரானின் சமரச யோசனையை முற்றாக ஏற்றுக் கொள்ள முடியாதிருப்பதாக ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் அறிவித்திருக்கிறார்.

எப்படியாயினும் வளைகுடாப் போரை நிறுத்துவதற்கான சகல முயற்சிகளையும் தொடர்ந்து எடுத்துவரப் போவதாக ஈரான் அறிவித்துள்ளது.

# அணு நிலையம் சேதம்

ஈராக்கின் அணு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை பன்னாட்டுப் போர் விமானங்கள் நேற்று வெற்றிகரமாகச் சேதப்படுத்தின என அமெரிக்க தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

# யுத்தநிறுத்தம் நிராகரிப்பு

சகல யுத்தநிறுத்த யோசனைகளையும் ஈராக் நிராகரித்து விட்டது. பக்தாத் வானொலி நேற்று இதனை அறிவித்தது.

தற்போது நடைபெறும் யுத்தம் குவைத்துக்காக நடைபெறவில்லை; அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெறுகிறது என்றும் பக்தாத் வானொலி மேலும் தெரிவித்தது.

★ குடியிருப்புகள் மீது நடத்தும் தாக்குதல் நிறுத்தப்படும் வரை போர்க் கைதிகளாக வைக்கப்பட்டுள்ள பன்னாட்டுப் படையினரைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று ஈராக் நேற்று அறிவித்தது.

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து சதாசிவம்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

காரைநகரைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்டவருமாகிய நாகமுத்து சதாசிவம் 09-02-91 அன்று கிளிநொச்சியில் காலமானார். அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், சிவராசா (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை), சிவாஜினி, இலகுமார், (தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை), காண்டீபன் (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலட்சுமி, சோதிநாதன் (சமநலச் சேவை), ஞானேஸ்வரி (சமநலச் சேவை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தன், தர்சிகா, ஜனகன், காயத்திரி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-2-91 மாலை 49/1, கணேசபுரம் கிளிநொச்சியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

9/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சிவராசா

(15808)

## சிவஸ்ரீ ச. சாமிக் குருக்கள்

துன்னாலை வடக்கு அல்லைப்பெற்றான் சிவசுப்ரமண்ய சுவாமி கோவில் முன்னாள் பிரதம குருவாக விளங்கிய சிவஸ்ரீ ச. சாமிக் குருக்கள் அவர்கள் 10-02-1991 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் வல்லிபுரமாழ்வார் வைகுந்தபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11-2-91) பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பாலம்பிகை அம்மா
பிள்ளைகள்

இந்திரன் அம்மன் கோவிலடி,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(15435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org